
31.03.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## மூன்றடுக்காக விளைந்த அபூர்வ பூண்டு



மூன்றடுக்குகளுடன் அபூர்வமாக விளைந்த பூண்டை பொதுமக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

ஆந்திர மாநிலம், சித்தூர் மாவட்டம் ராமசந்திராபுரம் ராயலசெருவில் உள்ள வியாபாரி ஆறுமுகத்தின் கடைக்கு விற்பனைக்கு பூண்டு மூட்டை வந்தது.

அதில் ஒரு பூண்டு வழக்கத்துக்கு மாறாக மூன்று அடுக்குகளுடன் விளைந்திருந்தது தெரியவந்தது. இந்த அபூர்வ பூண்டினை பொது மக்கள் ஆச்சரியத்துடன் பார்த்துச் சென்றனர்.

**மேவளூர்குப்பத்தில் ரூ. 75 லட்சத்தில் கால்நடை மருத்துவமனை**

மேவளூர்குப்பம் பகுதியில் கால்நடை பராமரிப்புத் துறை சார் பில் ரூ. 75 லட்சம் மதிப்பீட்டில் கால்நடை மருத்துவமனைக்கான கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட மேவளூர்குப்பம், வளர்புரம், தண்டலம், இருங்காட்டுக்கோட்டை, கீவளூர், மண்ணூர் உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பலர் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இப் பகுதிகளைச் சேர்ந்த கால்நடைகள் நோயினால் பாதிக்கப்பட்டால் சிகிச்சைக்காக சுமார் 15 கி.மீ தொலைவில் உள்ள ஸ்ரீபெரும்புதூர் அரசு கால்நடை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை இருந்து வந்தது. இதனால் கால்நடை வளர்ப்பவர்களுக்கு அதிக சிரமம் ஏற்பட்டது.

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த கால்நடைகளின் உரிமையாளர்கள் தங்களது பகுதியிலேயே கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என பல ஆண்டுகளாக அரசுக்கு கோரிக்கை வைத்து வந்தனர். பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று ரூ. 75 லட்சம் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் மேவளூர்குப்பம் பகுதியில் அரக்கோணம்-தண்டலம் சாலையில் உள்ள அரசு இடத்தில் மருத்துவமனை கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டு மருத்துவமனை கட்டுவதற்கான கட்டடப் பணிகள் கடந்த மாதம் தொடங்கப்பட்டு சில தினங்களாக கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

இதற்கு இப்பகுதியைச் சேர்ந்த கால்நடை உரிமையாளர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

**கோடை வெப்பத்தை தணிக்க தென்னை ஓலையை நாடும் மக்கள்**



கோடை வெப்பத்தைத் தணிக்க தென்னை ஓலையை வாங்கி வீட்டின் ஓடுகளின் மீது பொதுமக்கள் அமைத்து வருகின்றனர்.

குளிர்காலம் முடிந்து தற்போது கோடைக் காலம் தொடங்கியுள்ளது. தொடக்கத்திலேயே கடுமையான வெப்பம் மக்களை வாட்டி வருகிறது. இதனால் வீடுகளுக்குள் வெப்பம் அதிகரித்து வருகிறது. பலரது வீடுகளில் ஏசி இயந்திரம் பொருத்தப்பட்டிருந்தாலும், அடிக்கடி மின் தடை ஏற்படுவதால் வீட்டினுள் இருக்க முடியாத நிலை ஏற்படுகிறது. இதனால் வீடுகளில் அனலைக் குறைக்க, தென்னை ஓலைகளை வாங்கி மொட்டை மாடி, சிமென்ட் கூரைகள் ஆகியவற்றின் மேல் கொட்டகை அமைத்து, அதன் மீது தண்ணீர் தெளித்து அனலைக் குறைத்து வருகின்றனர்.

இதையடுத்து திருவள்ளூர், சுற்றியுள்ள கிராமங்களில் தென்னை ஓலை வியாபாரம் சூடு பிடித்துள்ளது. கடந்த கோடைக் காலத்தில், 100 தென்னை ஓலைகள் ரூ. 440 முதல் ரூ. 450 வரை விற்பனையானது. தற்போது 100 தென்னை ஓலைகள் ரூ. 600 முதல் ரூ. 650 வரை விற்கப்படுகின்றன.

தற்போது கிராமங்களில் அதிகளவில் தென்னை ஓலைகளை எடுத்து, கீற்று பின்னும் பணியில் பெண்கள் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர்.

## கோடைப்பருவ நெல் பயிரில் நோய் தாக்குதல்

ராஜபாளையம் பகுதியில் கோடை நெல் சாகுபடியில் நோய்த் தாக்குதல் அதிகரித்து வருகிறது.

ராஜபாளையம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதியில் இந்த ஆண்டு அதிக அளவில் கோடை பருவ நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது கோடை வெயில் முன் கூட்டியே வாட்டி எடுத்துவருகிறது. இந்த வெயிலால் நெல் பயிரில் இலைக் கருகல் நோய் , இலைச் சுருட்டுப்புழு நோய்த் தாக்குதல் ஏற்பட்டுள்ளது. இதனால் பயிர் வளர்ச்சி குறைந்துள்ளது என விவசாயிகள் தெரிவித்தனர்.

## பவானிசாகர் அணைக்கு நீர்மின் அணைகளில் இருந்து இன்றுமுதல் தண்ணீர் திறப்பு

பவானிசாகர் அணைக்கு நீலகிரி மாவட்டத்தின் நீர்மின் அணைகளில் இருந்து வியாழக்கிழமை முதல் தண்ணீர் திறக்கப்படும் என பொதுப் பணித் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பவானிசாகர் அணையில் இருந்து மார்ச் 13-ஆம் தேதி முதல் புன்செய் பாசனத்துக்கு உள்பட்ட 1 லட்சத்து 3,500 ஏக்கர் நிலங்களுக்குத் தண்ணீர் திறக்கப்பட்டது. மொத்தம் 5 சுற்றுகளுக்கு 10.5 டிஎம்சி தண்ணீர் திறக்க முடிவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, இதுவரை 4 சுற்றுகளுக்கு மார்ச் 29-ஆம் தேதி வரையில் மொத்தம் 46 நாள்களுக்குத் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இனி மீதமுள்ள 5-ஆவது சுற்றுக்கு வரும் ஏப்ரல் 8 முதல் 18-ஆம் தேதி வரை 10 நாள்களுக்குத் தண்ணீர் திறக்கப்பட உள்ளது. தற்போது அணையில் உள்ள நீர்இருப்பு குறைவாக உள்ளதால் நீலகிரி மாவட்டத்தில் உள்ள நீர்மின் அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விடக்கோரி, கீழ்பவானி முறை நீர்ப் பாசன விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இதையேற்று நீலகிரி மாவட்டத்தின் நீர்மின் அணைகளில் இருந்து தண்ணீர் திறந்து விட பொதுப் பணித் துறையின் தலைமைப் பொறியாளருக்கு ஆட்சியர் பரிந்துரை செய்தார். இதைத் தொடர்ந்து, நீர்மின் அணைகளில் இருந்து வியாழக்கிழமை முதல் (மார்ச் 31) தொடர்ந்து 33 நாள்களுக்கு 1,300 கனஅடி வீதம் தண்ணீர் திறக்க முடிவு செய்துள்ளதாக பொதுப் பணித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து பொதுப் பணித் துறை அதிகாரிகள் மேலும் கூறியதாவது:

கீழ்பவானி பாசனத்துக்கு உள்பட்ட 1 லட்சத்து 3,500 ஏக்கர் நிலங்களுக்கு 5-ஆவது நனைப்புக்கு 2 டிஎம்சி தண்ணீர் தேவைப்படுகிறது. இதுவரை 4 சுற்றுகளுக்குத் தண்ணீர் வழங்கப்பட்டுள்ள நிலையில் 5-ஆவது சுற்றுக்கு பவானிசாகர் அணையில் போதிய நீர்இருப்பு இல்லை.

தற்போது 4.5 டிஎம்சி தண்ணீர் மட்டுமே இருப்பு உள்ள நிலையில் கீழ்பவானி பாசனத்துக்கு இறுதிச் சுற்றுக்கு 2 டிஎம்சியும், கொடிவேரி பாசனத்துக்கும், காலிங்கராயன் பாசனத்துக்கும் ஏப்ரல் 30-ஆம் தேதி வரை தண்ணீர் திறக்கப்பட வேண்டும்.

தற்போதைய நிலையில் அணையில் இருந்து 1 டிஎம்சி மட்டுமே எடுக்க முடியும் என்பதால் நீலகிரி மாவட்டத்திலுள்ள நீர்மின் அணைகளில் இருந்து வியாழக்கிழமை முதல் தொடர்ந்து 33 நாள்களுக்கு 3.5 டிஎம்சி. தண்ணீர் பெற முடிவு செய்யப்பட்டு அதற்கான பரிந்துரை செய்யப்பட்டது.

இந்தப் பரிந்துரையை ஏற்று நீலகிரி மாவட்டத்தின் நீர்மின் அணைகளான பைகாரா, குந்தா, கெத்தை, அவலாஞ்சிஆகிய அணைகளில் இருந்து மோயாறு பள்ளத்தாக்கு மற்றும் பவானி ஆற்றின் வழியே பவானிசாகர் அணைக்குத் தண்ணீர் திறக்கப்பட உள்ளது. இதற்கான அரசாணை வியாழக்கிழமை காலைக்குள் வரும் என எதிர்பார்க்கிறோம் என்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## கோவை வேளாண் பல்கலைக்கு கை நிறைய பரிசு! ஆராய்ச்சி திட்டங்களுக்கு அங்கீகாரம்



கோவை:விவசாயத்தில் ரசாயனங்களை தவிர்த்து, இயற்கை வழி பயிர் மேம்பாடு ஆராய்ச்சி மற்றும் கட்டமைப்புகளுக்காக, தமிழ்நாடு வேளாண் பல்கலை, கடந்த ஐந்தாண்டுகளில், 21 விருதுகளை பெற்று சாதனை படைத்துள்ளது.தமிழ்நாடு வேளாண் பல்கலையின் கீழ், 18 உறுப்பு மற்றும் இணைப்பு கல்லூரிகள், 14 ஆராய்ச்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இதில், துறை சார்பான பயிர் மேம்பாடு, உற்பத்தி, பூச்சி கட்டுப்படுத்துதல் உள்ளிட்ட ஆராய்ச்சிகள் நடக்கின்றன.இத்தகைய ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கும் வகையில், ஆண்டுதோறும் தேசிய, சர்வதேச அளவில் பல்கலை, கல்லுாரிகளுக்கு விருதுகள் வழங்கப்படுகின்றன.இதில் நடப்பாண்டு, டில்லி 'வேர்ல்ட்வைட் அச்சீவர்ஸ்' அமைப்பின், 'ஆசிய எஜுகேஷன் விருதுகள்' வழங்கும் விழாவில், தேசிய அளவில் சிறந்த வேளாண் பல்கலைக்கான விருது, கோவை வேளாண் பல்கலைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதே போல், 2011-2016 வரை, 21 விருதுகளை பெற்றுள்ளதாக கூறுகிறார், வேளாண்

பல்கலை, திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்கக இயக்குனர் சந்திரசேகரன்.அவர் கூறியதாவது:விவசாயத்தில் ஆராய்ச்சிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்காக வேளாண் பல்கலையில், மாணவர்கள், பேராசிரியர்கள், விவசாயிகள் ஆகிய மூன்று தரப்பினருக்கும் பயன்படும்படியான திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.இதில், கல்லூரி கட்டமைப்பு, பேராசிரியர்கள் கற்பிக்கும் முறை, வேலைவாய்ப்பு, பயிற்சி பட்டறைகள், ஆராய்ச்சிக்கான வழிகாட்டல், விரிவாக்க முறை, விவசாயிகள்- மாணவர்கள்- ஆராய்ச்சியாளர்கள் தொடர்பு, நவீன விவசாயம் உள்ளிட்டவை அடங்கும். இப்படி, அனைத்து திட்டங்களையும், தமிழ்நாடு வேளாண் பல்கலை சிறப்பாக செயல்படுத்தியதால், இவ்விருது பெற முடிந்தது. 2014ம் ஆண்டு, கலை, அறிவியல், மருத்துவம், வேளாண், பொறியியல் என அனைத்து தொழில்சார் மற்றும் தொழில்சாரா கல்லூரி, பல்கலை கணக்கீட்டிலும், 'ஒட்டுமொத்த விருது' வேளாண் பல்கலைக்கு வழங்கப்பட்டது. இதே போல் ஆராய்ச்சிகள், மாணவர்களின் கண்டுபிடிப்புகள், புதிய அறிமுகங்கள் உள்ளிட்டவற்றுக்காக, 21 விருதுகள் கிடைத்துள்ளன. வரும் ஆண்டில், ரசாயன கலவை இல்லாத, சங்க கால இயற்கை வழி விவசாயத்தை மீட்டெடுப்பதற்கான, நவீன ஆராய்ச்சி கண்டுபிடிப்புகளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளோம். அதோடு, விவசாயிகள், வேளாண் ஆராய்ச்சியாளர்கள் இடையேயான தொடர்பு அதிகரிக்கவும், புதிய உத்திகள் கையாளப்படும்.இவ்வாறு, சந்திரசேகரன் கூறினார்.

**கோடையில் மேற்கே சிறந்தது**

தண்ணீரை எச்சில்படுத்தி குடிப்பது மேற்கத்திய நாட்டுமக்களின் பாணி. இந்தியாவின் வடமாநிலங்களில் இவ்வாறு தான் குடிப்பர். தென்மாநிலங்களில் குறிப்பாக தமிழகத்தில் தண்ணீரை அண்ணாந்து எச்சில் படாமல் குடிக்கும் வழக்கம் உள்ளது. வெயில் காலத்தில் தண்ணீரை அண்ணாந்துஎச்சில் படாமல் குடிப்பதால் தாகம் அடங்குவதில்லை. உறிஞ்சி குடிப்பதால் மட்டுமே தாகம் அடங்கும். நமது

ரத்தத்தின் திசுக்களின் நீரும், உப்பும் சீரான அளவில் உள்ளன. இவற்றில் ஏற்படும் குறைவு தான் தாகமாக வெளிப்படுகிறது. தாகம் ஏற்படும் வரை காத்திருக்காமல் இடையிடையே மிக சிறிதளவாவது நீர் அருந்த வேண்டும்.

**காஞ்சி ரக கத்திரி விளைச்சல் அமோகம்**

காஞ்சிபுரம் : மாவட்டத்தில், காஞ்சி ரக கத்திரிக்காய்க்கு நல்ல வரவேற்பு உள்ளது. இந்த ரக கத்திரிக்காய் அதிக அளவில் பயிரிடப்படுவதால் விலையும் குறைந்துள்ளது. 1 கிலோ, 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

காஞ்சிபுரம் மாவட்டத்தின் பாரம்பரிய காய்களில், கத்திரிக்காய் முக்கியமானது. தோட்ட பயிர்களாக இந்த காய்கறி பயிரிடப்படுகிறது; இந்த முறை வழக்கத்தை விட அதிகம் பயிரிட்டுள்ளனர்; நல்ல வரவேற்பும் உள்ளது. மகசூல் அதிகம் இருப்பதால், கடந்த ஜனவரி மாதம், 1 கிலோ கத்திரிக்காய், 60 ரூபாய்க்கு விற்கப்பட்டது. தற்போது, 10 ரூபாய்க்கு சந்தையில் விற்கப்படுகிறது. முன்னர், நாட்டு கத்தரிக்காய் சந்தைக்கு அதிகம் வரும். தற்போது அதன் விலை அதிகம் இருப்பதாலும் விளைச்சல் குறைவு காரணமாகவும் சந்தைக்கு அதிகம் வரவில்லை. அதற்கு மாற்றாக, காஞ்சி ரக கத்திரிக்காய் அதிக அளவில் பயிரிடப்படுகிறது.

எங்கெங்கு விளைச்சல்?

காஞ்சிபுரத்தை சுற்றியுள்ள, வில்லிவலம், தண்டை, பூச்சிவாக்கம், கிதிரிபேட்டை, கீழ்கதிர்பூர், தேனம்பாக்கம்,செம்புலம் ஆகிய பகுதிகளில் கத்திரிக்காய் பயிரிடப்படுகிறது.

நாட்டு கத்திரிக்காய் விதை கிடைக்கவில்லை; அதனால், காஞ்சி ரக கத்திரிக்காய் பயரிட்டுள்ளேன். 1 ஏக்கருக்கு ஆரம்பத்தில், 30 கிலோ கிடைத்தது; பின், 50 கிலோ வரை கிடைத்தது. மொத்தமாக விற்றால், போதிய விலை கிடைக்காது என்பதால், நான் கிராம பகுதியில் நடக்கும் சந்தைக்கு கொண்டு சென்று விற்பனை செய்கிறேன்; அதனால் சற்று லாபம் கிடைக்கிறது.

- ஜீ.ரமேஷ், விவசாயி, செம்புலம்

காய்கறி பயிரிடப்பட்டுள்ள பரப்பு (ஏக்கரில்)

| | |
|---|---|
| கத்திரி | 115.2 |
| வெண்டை | 52.2 |
| கொடி காய்கறிகள் | 69.6 |

கத்திரிக்காய் சந்தை நிலவரம்

| | மொத்த விலை ரூபாய் | சில்லரை விலை ரூபாய் |
|---|---|---|
| காஞ்சி ரகம் | 7 | 10 |
| டிஸ்கோ கத்திரி | 5 | 8 |
| உஷாலா கத்திரி | 7 | 1 |
| முள் கத்திரி | 10 | 10 |

## கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி

வேலூர்: "வேலூர் மாவட்டத்தில், ஐந்து லட்சம் கால்நடைகளுக்கு கோமாரி தடுப்பூசி போடப்பட்டுள்ளது," என, வேலூர் மண்டல கால்நடை இணை இயக்குனர் ராஜசேகரன் கூறினார். இதுகுறித்து அவர் கூறியதாவது: கோடை காலம் துவங்கி விட்டதால், கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதை தடுக்க, மாவட்டம் முழுவதும் கடந்த, 1ம் தேதி முதல், 21ம் தேதி வரை தடுப்பூசி முகாம் நடந்தது. இதில், 5 லட்சத்து 47 ஆயிரம் கால்நடைகளுக்கு, கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. இவ்வாறு அவர் கூறினார்.

## மூலிகைகளுக்கு நோய் தீர்க்கும் வல்லமை

ஊட்டி:'நீலகிரி உயிர்ச்சூழல் மண்டலத்தில் விளையும் மூலிகைகளுக்கு, பல நோய்களை குணப்படுத்தும் வல்லமை உள்ளது' என, தெரிவிக்கப்பட்டது.

மைசூர் ஜே.எஸ்.எஸ்., பல்கலை கழகம், இந்திய மருந்தியல் சங்கம் சார்பில், ஊட்டி ஜே.எஸ்.எஸ்., பார்மசி கல்லுாரியில், இரண்டாம் நாள் தேசிய கருத்தரங்கு நேற்று நடந்தது.

இதில், தாவரவியல் வல்லுனர் டாக்டர் ராஜன் பேசியதாவது:நமது நாட்டில், அரிய வகை மூலிகைச் செடிகள் அதிகளவில் வளர்கின்றன. மனிதன், காடுகளை நம்பி வாழ்ந்த காலத்தில், மூலிகைகளை பயன்படுத்தி நோய்களுக்கு நிவாரணம் கண்டனர். தற்போதைய நகர வாழ்க்கையில், அவை, மருந்து, மாத்திரையாக மாற்றம் பெற்றுள்ளன.நீலகிரி உயிர்ச்சூழல் மண்டலத்தில் விளையும் மூலிகைகளுக்கு, பல நோய்களை குணப்படுத்தும் வல்லமை உள்ளது. இவற்றை பழங்குடியின மக்கள் நோய்க்கு தகுந்தவாறு, பயன்படுத்துகின்றனர். குறிப்பாக,

சளி, காய்ச்சல், தலைவலி ஆகியவற்றிற்கு, நீலகிரியில் விளையும் செண்பக பூ மரப்பட்டைகளில் தயாரிக்கப்படும் கசாயம் மிகுந்த பயன் அளிக்கிறது. வாதங்கொல்லி இலை, வாதம் சம்மந்தப்பட்ட நோய்களுக்கு தீர்வாகிறது.உஷ்ணத்தால், ஏற்படும் 'பைல்ஸ்'களுக்கு காட்டு வெங்காயம் சிறந்த மருந்தாக உள்ளது. மஞ்சள் காமாலைக்கு, கீழாநெல்லி, நீலகிரியில் விளையும், பெரு கீழாநெல்லி மூலிகைகள் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. வயிற்று வலியை குணப்படுத்தும் வசம்பு தாய்பாலில் கலந்து கொடுக்கப்படுகிறது. இதில், பல மூலிகைகளை ஒன்று சேர்த்து, ஒரு சில நோய்களை குணப்படுத்தும் வித்தைகளை நமது பழங்குடியினர் கற்று வைத்துள்ளனர். இவர்கள், இந்த செயல்முறைகளை கள ஆய்வின் போது வெளிப்படுத்தினால், அந்த பயன்பாட்டின் பங்கு குறித்தும், தயாரிப்புக்கும் ஜே.எஸ்.எஸ்., பல்கலை கழகத்தின் உதவியுடன், பழங்குடியினருக்கு காப்புரிமை பெற்றுத்தரப்படும். இதன்மூலம் கிடைக் கும் தொகை, பழங்குடியின சமுதாய வளர்ச்சிக்கும் பயன்படுத்தப்படும். இவ்வாறு ராஜன் பேசினார்.

இதை தொடர்ந்து, பல்வேறு ஆதிவாசி மக்களிடம், மூலிகை பயன்பாடு குறித்த விவாதங்கள் நடத்தப்பட்டன.

**பந்தலூரில் பலாப்பழ சீசன்**

பந்தலுார்:பந்தலுார் பகுதியில் பலாப்பழ சீசன் களைகட்டி உள்ளது.

பந்தலுார், கூடலுார் பகுதிகளில் ஆண்டுதோறும் பலாப்பழம் அதிகளவில் விளையும். இங்கு விளையும் பழாப்பழங்கள் கோவை, திருப்பூர், பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்நிலையில், அய்யன்கொல்லி, அம்பலமூலா, எருமாடு, கோட்டூர், தாளூர் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது, பலாப்பழங்கள் அதிகள வில் விளைந்துள்ளன. இதற்கு கிராக்கியும் அதிகரித்துள்ளது. இவற்றை யானைகளிடமிருந்து காக்க, பந்தலுார் விவசாயிகள் போராடுகின்றனர்.

## இரண்டு அடி உயரத்தில் குலை தள்ளிய ஆமணக்கு

வேடசந்துார்: விவசாயத்தில் நவீன தொழில் நுட்பம் காரணமாக, இரண்டு அடி உயரத்தில் ஆமணக்கு பயிரில் "குலை தள்ளி' மகசூலுக்கு தயாராக உள்ளது.

கிராமப்புறங்களில் கடலை மற்றும் மிளகாய், தக்காளி பயிரில் ஊடுபயிராக ஆமணக்கு பயிரிடுவர். வெப்பத்தை தாங்கி பயிருக்கு நிழல் தருவதாலும், ஆமணக்கு விதைகள் மூலம் கூடுதல் வருவாய் கிடைக்கும் என்பதாலும் இதை விரும்பி பயிரிடுவர்.

இந்த விதைகளை "கொட்டை முத்து' எனவும் கூறுவர். இந்த பயிரில் இருந்து கிடைக்கும் இலைகள் கால்நடைகளுக்கு தீவனமாகவும், விதைகள் விளக்கெண்ணெய் தயாரிக்கவும் பயன்படுகிறது.

இப்பயிர் 8 முதல் 10 அடி வரை வளர்ந்து, படர்ந்து விரிந்து, கிளைகளில் கொத்துக் கொத்தாக காய்க்கும். தற்போது நவீன ரகங்களில், மூன்றே மாதங்களுக்குள் மகசூல் பார்க்கும் அளவில், நவீன ரகங்கள் நடவுக்கு வந்துள்ளன.

சாலையூர் நால்ரோட்டு பகுதியில், ரோட்டோரம் இதை நடவு செய்துள்ளனர். குட்டையான இப்பயிரை அதிசயத்துடன் விவசாயிகள் பார்க்கின்றனர். சாலையூர் நால்ரோடு விவசாயி முத்துச்சாமி: தக்காளி

பயிருக்கு நிழலாக இருக்கும் என்பதற்காக, கால்கிலோ ஒட்டுரக விதையை ரூ.150க்கு வாங்கி நடவு செய்தோம்.

இரண்டு அடி உயரத்திலேயே குலை தள்ளி கொத்துக் கொத்தாய் காய்ப்புக்கு வந்துவிட்டது. நல்ல மகசூல் கிடைக்கும் என நம்புகிறேன், என்றார்.

## தேனி செவ்விளநீருக்கு கிராக்கி ரூ.13க்கு வியாபாரிகள் கொள்முதல்

சின்னமனூர்: தேனி மாவட்டத்தில் செவ்விளநீருக்கு "கிராக்கி' ஏற்பட்டுள்ளது. மொத்த வியாபாரிகள் தோட்டத்திற்கு நேரடியாக வந்து ஒரு இளநீர் ரூ. 13க்கு கொள்முதல் செய்வதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மாவட்டத்தில் கம்பம் பள்ளதாக்கு, போடி, பெரியகுளம் பகுதியில் நல்ல நீர்வளம் மிக்க தோட்டங்களில் தென்னை சாகுபடி நடக்கிறது. அதிக விளைச்சல், நல்ல விலை கிடைப்பதால் டி.என்.டி., ரக தென்னை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். கொப்பரை விலை சரிந்ததால், தேங்காய் விலை குறைந்து விட்டது. பருவட்டு ரக தேங்காய் ரூ.6க்கும், சிறிய ரகம் ரூ. 5க்கும் மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்கின்றனர்.

இதற்கு நேர்மாறாக டி.என்.டி., ரகத்தை சேர்ந்த செவ்விளநீர் குறைந்தபட்ச விலையாக ரூ.13க்கு தோட்டத்தில் வந்து நேரடியாக வெட்டி செல்கின்றனர். மரத்திலிருந்து இறக்கும் கூலி, சுமை, வண்டி வாடகையில்லாமல் இளநீர் கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

மொத்த வியாபாரிகள் கூறுகையில், ""கோடை துவங்கியுள்ளதால் மதுரை, திருச்சி, சென்னை உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு பகுதிகள், மும்பை, கான்பூர் உள்ளிட்ட வெளிமாநில பகுதிகளுக்கும் தேனி மாவட்டத்திலிருந்து லாரிகளில் இளநீர் அனுப்பப்படுகிறது. மற்ற ரகங்களை விட செவ்விளநீருக்கு கூடுதல் விலை கிடைப்பதால் "கிராக்கி'

ஏற்பட்டுள்ளது. நகர் பகுதியிலுள்ள சில்லரை வியாபாரிகள் ரூ.25க்கு விற்பனை செய்வதால் கணிசமான லாபம் கிடைக்கிறது," என்றனர்.

## வன ஆராய்ச்சி மாணவர்கள் மகிழம் பூ மரம் குறித்து ஆய்வு




சேலம்: சேலம் நாட்டாண்மை கழக கட்டட வளாகத்தில் உள்ள, மகிழம் பூ மரம் குறித்து, வனத்துறை ஆராய்ச்சி மாணவர்கள் ஆய்வு மேற்கொண்டனர். வனத்துறையில் ஆராய்ச்சி படிப்பு மேற்கொள்ளும் மாணவர்கள், சேலம் நாட்டாண்மை கட்டடத்தில் உள்ள மகிழம் பூ மரத்தை, நேற்று பார்வையிட்டனர். அப்போது, தமிழகத்திலேயே, 135 செ.மீ., சுற்றளவு கொண்ட பெரிய அளவிலான மகிழம் மரம் இருப்பது சேலத்தில் தான் என்பதை விளக்கினர். ஆராய்ச்சி மாணவர்கள் கூறுகையில், 'மழை, காற்று, புயல் அனைத்துக்கும் தாக்குப்பிடித்து வளர்ந்துள்ள இந்த மரம், சேலத்தில் மட்டுமே உள்ளது. அதில் உள்ள விதைகளை எடுத்து சென்று ஆய்வு செய்யவும், அதை மண்ணில் நட்டு வளர்க்கவும் திட்டமிட்டுள்ளோம்' என்றனர்.

## கேரள அன்னாசி பழம் விற்பனை படுஜோர்

ராமநாதபுரம்: ராமநாதபுரம் சந்தையில் கேரள அன்னாசி பழம் விற்பனை படுஜோராராக நடந்தது.

கேரளாவில் அன்னாசி பழம் சீசன் துவங்கி உள்ளது. இங்கிருந்து தினமும் பழம் ஏற்றிய லாரிகள் தமிழகம் வந்தடைகிறது. ராமநாதபுரத்தில் லாரிகளில் கொண்டுவரப்பட்ட அன்னாசி பழம் நேற்று வாரச்சந்தை பகுதியில் விற்பனை செய்யப்பட்டது.

அரை கிலோ பழம் ஒன்று ரூ.15க்கு விற்கப்பட்டது. பொதுமக்கள், வியாபாரிகள் ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர். இன்னும் சீசன் அதிகமானால் வரத்து அதிகரிக்கும். அப்போது, விலை குறைய வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## காலையில் 800 மாலையில் 700 சந்தையில் நாட்டுக்கோழி விலை

ராமநாதபுரம்: ராமநாதபுரம் வாரச்சந்தையில் நாட்டுக்கோழி ஜோடி காலையில் ரூ.800க்கும், மாலையில் ரூ.700க்கும் விற்பனையானது.

ராமநாதபுரத்தில் புதன் கிழமை தோறும் வாரச்சந்தை நடக்கிறது. இங்கு காய்கறி, பழம், கருவாடு, நிலக்கடலை, மளிகை சாமான்கள் உள்ளிட்ட பொருட்கள் விற்கப்படுகிறது. வாரச்சந்தை நாளில் ஆடு, கோழி வியாபாரம் மும்முரமாக உள்ளது.

வழிவிடு முருகன் கோயில், சாலைத்தெரு சந்திப்பு பகுதிகளில் நாட்டுக்கோழி விற்பனை களைகட்டும். சத்திரக்குடி, பாண்டிக்கண்மாய், ஆர்.எஸ்.மடை, கீழக்கரை பகுதிகளில் உள்ள வீடுகளில் வளர்க்கப்படும் நாட்டுக்கோழிகள் பெரும்பாலும் விற்பனைக்கு கொண்டு வரப்படுகின்றன. நாட்டுக்கோழி காலையில் ஜோடி ரூ.800க்கும், மாலையில் ரூ.700க்கும், ஒற்றை சேவல் ரூ.300 வரை விற்கப்படுகிறது. புதிய வீடுகளுக்கு பலி கொடுக்கவும், திருஷ்டி கழிக்கவும் நகர், கிராமப்புற மக்கள் ஏராளமானோர் வாங்கி செல்கின்றனர். கடந்த 6 மாதங்களாக இதே விலையில் நாட்டுக்கோழி விற்பனை

யாகிறது.

## மகசூல் அதிகரிக்க சான்று பெற்ற விதைகள்

நாமக்கல்: மகசூல் அதிகரிக்க சான்று பெற்ற விதைகளை வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். பயறு வகைகளில், உளுந்து, கடலை, துவரை, பாசிப்பயிறு உள்ளிட்ட பல்வேறு ரகங்கள் உள்ளன. இத்தகை ரகங்களை விதை நேர்த்தி செய்தால் மட்டுமே மகசூல் அதிகரித்து, கூடுதல் வருவாய் கிடைக்கும். அதனால், சான்று பெற்ற விதைகளை வாங்கி, சாகுபடி செய்கின்றனர். அவர்களுக்கு, நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் முறையான பயிற்சி அளிக்கப்படுகிறது. அவ்வாறு பயிற்சி பெற்ற பலரும், மாவட்டம் முழுவதும் விதை நேர்த்தி செய்து தோட்டக்கலை விதைகளை உற்பத்தி செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

இதுகுறித்து, சேந்தமங்கலம் விதை உற்பத்தியாளர் நல்லதம்பி கூறியதாவது: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், விதை நேர்த்திக்கென பயிற்சி பெற்றுள்ளேன். ஒரு ஏக்கருக்கு, உளுந்து சாகுபடி செய்ய, 4,000 முதல், 5,000 ரூபாயும், கடலைக்கு, 10 ஆயிரம் ரூபாய், துவரைக்கு, 4,000 ரூபாய், பாசிப்பயிறுக்கு, 4,000 முதல், 5,000 ரூபாய் வரை செலவாகும். உளுந்து சாகுபடியில், 12 ஆயிரம் முதல், 15 ஆயிரம் ரூபாய், கடலைக்கு, 16 ஆயிரம் ரூபாய், துவரைக்கு, 14 ஆயிரம் முதல், 15 ஆயிரம் ரூபாய், பாசிப்பயிறுக்கு, 20 ஆயிரம் ரூபாய் வரை லாபம் ஈட்டலாம். அறுவடை செய்யப்பட்ட விதைகள், அதற்கான விதைச்சான்று பெற்று விற்பனை செய்தபின், அதற்கான தொகை பெறுவதற்கு காலதாமதமாகிறது. ஆனால், குடோனில் கொண்டு சென்று விற்பனை செய்தால், உடனே பணம் கிடைத்துவிடுகிறது. அதற்கான நடைமுறையை தளர்த்தி, விரைந்து சான்று அளித்து, உற்பத்தி செய்த விதைக்கு தாமதமின்றி தொகையை வழங்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## நாட்டு ஈச்சங்காய்கள் விளைச்சல் அதிகரிப்பு

சிவகங்கை: சிவகங்கை,ராமநாதபுரம் மாவட்டங்களில் நாட்டு ஈச்சங்காய் விளைச்சல் அதிகரித்துள்ளது.

சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் காட்டு பகுதிகள், ஆற்றுப்படுகைகளில் அதிகளவில் நாட்டு ஈச்ச செடிகள் காணப்படுகின்றன. இவை வறட்சியை தாங்கி வரும். இவற்றிற்கு பிப்ரவரி முதல் ஜூன் வரை காய்ப்பு பருவம்.

கோடைகாலங்களில் விவசாய பணிகள் முடிந்து விடுவதால், விவசாயிகள் ஈச்சம்பழத்தை பறித்து விற்பனை செய்வர். இவை விவசாயிகளுக்கு மாற்றுத்தொழிலாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டு சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்டங்களில் ஈச்சக்காய்களின் விளைச்சல் அதிகரித்துள்ளது.

நாட்டாகுடி முருகேசன் கூறுகையில், "ஈச்சங்காய்கள் ஓரிரு வாரங்களில் பழுத்துவிடும். அதன்பின் அவற்றை பறித்து சிவகங்கை பகுதியில் விற்பனை செய்வோம். இந்த ஆண்டு விளைச்சல் அதிகரித்திருப்பது மகிழ்ச்சியாக உள்ளது,' என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### பனை மரங்கள் அருகி வரும் நிலையில் பனை தும்பிலிருந்து கயிறு தயாரிக்கும் பணி தீவிரம்



ராமநாதபுரம் : தமிழகத்தில் அருகி வரும் பனைமரங்களில் இருந்து சணல் கயிறுகள் தயாரிக்கும் பணி இன்றும் நடந்து வருகிறது. தமிழகத்தில் பனை மரங்கள் வெட்டி அழிக்கப்படுவதால் இவை அறுகி வருகின்றன. பனை மரங்களை நம்பி பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் உள்ளன. பனை மரங்களிலிருந்து ஓலைகள், மரச்சட்டங்கள், பதநீர், நுங்குகள், கிழங்குகள், பாமாயில் மற்றும் பனை வெல்லம், கருப்பட்டி போன்ற பல பொருட்கள் கிடைக்கின்றன. பனைப் பொருட்கள் அனைத்தும் அருமருந்தாக உள்ளன. ராமநாதபுரம் மாவட்டத்தில் உச்சிப்புளி, சுந்தரமுடையான், பிரப்பன்வலசை, வேதாளை, மண்டபம், ரகுநாதபுரம், முத்துப்பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் பனைமரங்கள் உள்ளன.

இந்நிலையில், ரகுநாதபுரம் அருகே முத்துப்பேட்டை பகுதியில் பனை மட்டையிலிருந்து பனைமரத் தும்புகள் இயந்திரங்களால் பிரிக்கப்பட்டு,

பின்னர் அவை நன்றாக வெயிலில் உலரவைக்கப்பட்டு கயிறுகளாகத் தயாரிக்கப்பட்டு வருகிறது. இதுதவிர இந்தத் தும்புகள் கயிறு மற்றும் கால் மிதி போன்றவை தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. அதிகளவில் பெண்கள் இத்தொழிலை செய்து வருகின்றனர். இதுகுறித்து பனைமரத் தும்பு பிரிக்கும் லெட்சுமி கூறுகையில், “பிரிக்கப்படும் பனைமரத் தும்புகளை கயிறுகளாக மாற்றி வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கிறோம். இந்த கயிறுகள் 100 கட்டுகள், 50 கட்டுகள் என பிரிக்கப்பட்டு அதிகபட்சமாக ஒரு கட்டு ரூ.4 வரையில் மொத்தக் கடைகளில் விற்பனை செய்கிறோம். இதை அவர்கள் வெளிமார்கெட்டில் கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்” என்றனர்.

## மாவட்டத்தில் அறுவடை முடிந்தது 25 ஆயிரம் டன் நெல் கொள்முதல்

ஈரோடு, :ஈரோடு மாவட்டத்தில் பாசன பகுதிகளில் திறக்கப்பட்ட நெல் கொள்முதல நிலையங்கள் மூடப்பட்டன. மாவட்டம் முழுவதும் 25 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன், கீழ்பவானி, மேட்டூர் மேற்கு கரை ஆகிய பாசனங்கள் உள்ளன. இந்த பாசன பகுதிகளில் 1 லட்சத்து 50 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் நெல் பயிரிடப்பட்டிருந்தது. கடந்த சில மாதங்களாக அறுவடை பணிகள் நடைபெற்று வந்ததையடுத்து 25க்கும் மேற்பட்ட கொள்முதல் நிலையங்கள் மாவட்டம் முழுவதும் திறக்கப்பட்டிருந்தது. தற்போது பணிகள் முழுமையாக முடிவடைந்ததையடுத்து கொள்முதல் நிலையங்கள் மூடப்பட்டுவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மாவட்டம் முழுவதும் 25 ஆயிரம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் வெளிமாநிலங்களில் இருந்து குறைந்த விலைக்கு நெல் வாங்கி வந்து அதிகாரிகளுடன் துணையுடன் அரசு நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து கோடிக்கணக்கில் மோசடி நடைபெற்று வந்தது. இதையடுத்து இந்த ஆண்டு நெல் கொள்முதல் செய்வதில் பல்வேறு மாற்றங்கள் கொண்டு வரப்பட்டது. குறிப்பாக நெல் விற்பனை செய்த

விவசாயி வங்கி கணக்கில் மட்டுமே பணம் செலுத்தப்படும் என்ற கெடுபிடியின் காரணமாக முறைகேடு செய்வது தடுக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் சுமார் ஒரு லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில் இந்த ஆண்டு நான்கில் ஒரு பகுதியாக 25 ஆயிரம் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை வர்த்தக மையத்தில் ரூ.2.42 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனை

கோவை, : கோவை தேயிலை வர்த்தக மையத்தில் நேற்று நடந்த ஏலத்தில் ரூ.2.42 கோடிக்கு தேயிலைத்தூள் விற்பனையாகியுள்ளது. 3 வாரங்களாக விலை உயர்ந்து வருவதால் வர்த்தகர்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கோவை தேயிலை வர்த்தக மையத்திலதில் புதன்கிழமை மாலை தோறும் தேயிலைத்தூள் விற்பனை, ஏலம் மூலம் நடக்கிறது. அதன்படி நேற்று நடந்த ஏலத்தில் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 1.68 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 1.54 லட்சம் கிலோ விற்பனையானது. 124 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.102.37. விற்பனை மதிப்பு ரூ.1.58 கோடி.

ஏற்றுமதி ரகம் (லீப்) 1.34 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. 93 ஆயிரம் கிலோ விற்பனையானது. 74 வர்த்தகர்கள் கொள்முதல் செய்தனர். சராசரி விற்பனை விலை கிலோ ரூ.90. விற்பனை மதிப்பு ரூ.83 லட்சம். கடந்த வார விற்பனையோடு ஒப்பிடுகையில், உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.2.42ம், ஏற்றுமதி ரகம் கிலோவுக்கு ரூ.1.59ம் அதிகரித்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.2.42 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரத்தை காட்டிலும் ரூ.1.61 லட்சம் அதிகமாகும். கடந்த 3 வாரங்களாக ேயிலைத்தூள் விற்பனை மற்றும் விலை அதிகரித்துள்ளது.

## இயற்கை உரங்களால் அதிக மகசூல் குறு விவசாயிகள் நம்பிக்கை

கோத்தகிரி,: நீலகிரி மாவட்டத்தில், விவசாயிகள் இயற்கை உரம் பயன்பாட்டிற்கு படிப்படியாக மாறி வருகின்றனர். நீலகிரியில், தேயிலை உட்பட மலைக்காய்கறி பயிர்களுக்கு கூடுமானவரை, வேதி உரங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இவ்வகை உரங்கள் தொடர்ந்து பயன்படுத்துவதால், மண்ணின் இயற்கையானசத்து குறைந்து, மண்ணின் தன்மை கெடுகிறது. வேதி உரங்களின் பயன்பாடு காரணமாக, விவசாயிகள் எதிர்பார்த்த விளைச்சல் கிடைப்பதில்லை. மண் பரிசோதனையின் அவசியம் கருதி, அரசு பல்வேறு வகைகளில், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதன் வாயிலாக, பெரும்பாலான விவசாயிகள் மண் பரிசோதனை செய்து, குறைபாடுகளுக்கு ஏற்ப, நிவர்த்தி செய்து வருகின்றனர்.

இந்நிலையில், அதிக விளைச்சல் கிடைக்கும் வகையில், முட்டைகோஸ் தோட்டங்களுக்கு, பெரும்பாலான விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்த தயாராகிவிட்டனர். குறைந்த விலையில், இயற்கை உரங்கள் உள்ளூரிலேயே கிடைப்பதால் விவசாயிகளுக்கு அனுகூலமாக உள்ளது. இதனால், முட்டைகோஸ் உள்ளிட்ட மலைக் காய்கறி தோட்டங்களில் இயற்கை உரங்களை பயன்படுத்துவதில், விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். அரசு மானியம் வழங்குவதுடன், தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினால், எதிர்காலத்தில் இயற்கை விவசாயம் அதிகரிக்கும். கீழ்கோத்தகிரி பகுதி விவசாயி பீமன் கூறுகையில், வேதி உரங்களால், பூமியில் சத்து குறைந்து, எதிர்பார்த்த மகசூல் கிடைப்பதில்லை. இதனால் குறைந்த விலையில், மாட்டு சாணம் உள்ளிட்ட இயற்கை உரங்களை பயன்படுத்தினால், எதிர்பார்த்த மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது என விவசாயி தெரிவித்தார்.

**தரமான பசுந்தேயிலைக்கு கூடுதல் விலை தேயிலை வாரிய உதவி இயக்குனர் பேச்சு**

மஞ்சூர், : விவசாயிகள் கரமான பசுந்கேயிலை உற்பக்தி செய்கால் கூடுதல் விலை கிடைக்கும் என தேயிலை வாரிய உதவி இயக்குனர் தெரிவித்தார்.

நீலகிரி மாவட்டம் மஞ்சூர் அருகே உள்ள எடக்காடு கலையட்டி கிராமத்தில் சிறு தேயிலை விவசாயிகள் சங்கத் துவக்க விழா நடைபெற்றது. விழாவிற்கு சங்க தலைவர் அர்ஜூனன் தலைமை தாங்கினார். சந்திரன், சுப்ரமணி ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இதில் கென்னிந்கிய கேயிலை வாரிய குந்தா மண்டல உகவி இயக்குனர் ரமேஷ் கலந்து கொண்டு சிறு தேயிலை விவசாயிகள் சங்கத்தை திறந்து வைத்தார். தொடர்ந்து அவர் பேசியதாவது, விவசாயிகள் தரமான பசுந்தேயிலையை உற்பத்தி செய்ய வேண்டும்.

இதுகுறித்து கிராமங்கள் தோறும் தேயிலை வாரியத்தின் சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. தரமான பசுந்தேயிலை செய்தால் கூடுதல் விலை கிடைக்கும். குந்தா தாலுகாவில் மட்டும் சுமார் 6ஆயிரம் ஹெக்டரில் தேயிலை விவசாயம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை 20 சிறு தேயிலை விவசாய சங்கங்கள் துவக்கப்பட்டு தேயிலை வாரியக்கில் பகிவு செய்யப்பட்டுள்ளது. கற்போது ஏப்ரல் மாகம் முகல் கேயிலை கோட்டங்களில் காவக்து செய்ய உகந்க காலம் என்பகால் குந்கா பகுகியை சேர்ந்க விவசாயிகள் கங்களகு கோட்டங்களில் கவாக்து செய்ய குந்கா மண்டல கேயிலை வாரிய அலுவலகத்தை அனுகி கவாத்து தொடர்பான விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்தார். விழாவில் தனியார் தேயிலை தொழிற்சாலை மேலாளர் சிவக்குமார், சிறு தேயிலை விவசாயிகள் சங்க நிர்வாகிகள் கணேஷ், சக்தி, உதயகுமார், ராஜன், விவேக் உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டார்கள். முன்னதாக சங்க செயலாளர் ரமேஷ் வரவேற்றார். ராமன் நன்றி கூறினார்.

## கொளுத்தும் ெவயிலால் பூக்கள் விலை சரிவு

சேலம், : கொளுத்தும் வெயிலால், சேலம் மார்க்கெட்டுகளில் பூக்களின் விலை சரிந்துள்ளது. சேலம் மாவட்டத்தில் ஆத்தூர், வாழப்பாடி, வலசையூர், மேட்டுப்பட்டி காகாபுர், இடைப்பாடி, பனமரத்துப்பட்டி, அரியானூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் பூக்கள் சாகுபடி செய்யப்படுகிறது. அங்கு அறுவடை செய்யப்படும் பூக்கள் சேலம் வ.உ.சி பூ மார்க்கெட்டுக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் இங்கிருந்து பெங்களூருக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது. இதனிடையே சேலம் மாவட்டத்தில் ெகாளுத்தும் வெயிலால், மார்க்கெட்டுக்கு வரும் பூக்களின் வரத்து அதிகரித்துள்ளது.

வெயில் காரணமாக ஒரே நாளில் கருகிவிடுவதாலும், பண்டிகைகள் எதுவும் இல்லாததாலும் பூக்களின் விலை சரிந்துள்ளது. இதனால் கடந்த வாரத்தை காட்டிலும், கிலோவுக்கு ரூ.50 முதல் 200 வரை விலை குறைந்துள்ளது. இதுகுறித்து பூ வியாபாரி ஒருவர் கூறியதாவது: கோடை காலம் ஆரம்பித்துள்ளதால், பூக்களின் வரத்து அதிகரித்துள்ளது. தினசரி 20 டன் அளவிற்கு இருந்த வரத்து, தற்போது 40 டன் வரை உள்ளது. குறிப்பாக குண்டுமல்லி வரத்து பல மடங்கு உயர்ந்துள்ளது. தற்போது, குண்டுமல்லி ரூ.160, சாமந்தி ரூ.60 முதல் 80 வரையும், கனகாம்பரம் ரூ.280 முதல் 320 வரையும், அரளி ரூ.60க்கும், ரோஜா கொத்து ரூ.60 முதல் 80 வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பங்குனி உத்திரம் முடிந்து, விஷேசங்கள் எதுவும் இல்லாததால், விற்பனையும் குறைந்துள்ளது. இதனால், பெங்களூருக்கு அதிகளவில் பூக்கள் அனுப்பி வைக்கப்படுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் ஏக்கருக்கு 250 கிலோ முந்திரி அறுவடை

அரியலூர், : இந்திய அரசின் முந்திரி மற்றும் கோகோ வளர்ச்சி இயக்குனரகம் மற்றும் சோழன்மாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையம் இணைந்து நடத்திய மாவட்ட அளவிலான முந்திரி சாகுபடி பற்றிய கருத்தரங்கம் பொன்பரப்பியில் திருமண மண்டபத்தில்

நடைபெற்றது. கருத்தரங்கின் துவக்கமாக கிரீடு வேளாண் அறிவியல் தோட்டக்கலை விஞ்ஞானி ராஜா ஜோஸ்லின் வரவேற்றார். கிரீடு வேளாண் அறிவியல் மையத்தின் மூத்த விஞ்ஞானி அழகுகண்ணன் தலைமை வகித்தார். முனைவர் கெய்சர் லார்துசாமி பேசுகையில் முந்திரி விவசாயிகள் குழுவாக ஒன்று சேர்ந்து விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனங்களை துவக்கி தொழில்நுட்பங்களை நன்கு தெரிந்து கொண்டு விளைபொருட்களை தரம் பிரித்து பதப்படுத்தி அதற்குண்டான விலையை தாங்களே நிர்ணயம் செய்து விற்பனை செய்து வாழ்வாதாரத்தை உயர்த்த வேண்டும்.

முந்திரியில் ஜூலை மாதத்தில் கவாத்து செய்யும் முறை மற்றும் அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார். முந்திரிக்கு தேவையான உரத்தினை தேவையான அளவு தேவையான நேரத்தில் சரியாக கொடுக்க வேண்டும் என்றார். அரியலூர் மாவட்டத்தில் தற்போது முந்திரி விவசாயிகள் ஏக்கருக்கு 200 முதல் 250 கிலோ வரை முந்திரி அறுவடை செய்து வருகின்றனர்.முந்திரியில் புதிய தொழில்நுட்பங்களை கடைபிடிப்பதன் மூலம் ஏக்கருக்கு சராசரியாக 800-1000 கிலோ வரை மகசூலை அதிகரிக்க முடியும்.

முந்திரி பயிருக்கு சொட்டுநீர் பாசனம் அமைத்து அடர் நடவுமுறை கடைபிடித்து (ஒரு ஏக்கருக்கு 200 கன்றுகள்) அதிக மகசூல் எடுக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் முந்திரியில் பயிறுவகை பயிர்களான உளுந்து, பாசி பயிறு, துவரை, தட்டை பயிறு போன்ற பயிர்களை ஊடுபயிராக பயிர் செய்து கூடுதல் வருமானம் மற்றும் மண் வளத்தையும் பெருக்கலாம் என்றும் மேலும் முந்திரியை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை இயற்கை முறையில் கட்டுப்படுத்த வேண்டும். மேலும் பயிர் வளர்ச்சி ஊக்கிகளான பஞ்சகாவ்யா, மண்புழு உரம், முட்டை கரைசல் மற்றும் மூலிகை பூச்சி விரட்டி தயாரித்தல் குறித்து செய்முறை விளக்கமும், முந்திரியில் உள்ள உயர் தொழில்நுட்பங்களை விளக்கி கூறி விவசாயிகளின் சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும் பதில் கூறி ஆலோசனை வழங்கினார்.

இதில் தோட்டக்கலை உதவி இயக்குனர் சிவக்குமார், தொழில் நுட்ப வல்லுனர் அசோக்குமார், கிரீடு வேளாண் அறிவியல் மைய

தோட்டக்கலை விஞ்ஞானி ராஜா ஜோஸ்லின், ராஜ்கலா பங்கேற்றனர். இக்கருத்தரங்கில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள 150 விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

**தொழில்நுட்பங்களை கடைபிடித்தால் வீரிய ஒட்டு மக்காச்சோளத்தில் அதிக மகசூல் பெறலாம் வேளாண் உதவி இயக்குனர் விளக்கம்**

சேதுபாவாசத்திரம், : சேதுபாவாசத்திரம் வட்டாரத்தில் வீரிய ஒட்டு மக்கா சோளம் சாகுபடியில் தொழில் நுட்பங்களை கையாண்டால் அதிக மகசூல் பெறலாம் என்று சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது: மக்கா சோளம் கால்நடை தீவனமாகவும், சமையல் எண்ணை எடுப்பதற்காகவும் பயன்படுவதுடன் தொழிற்சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச், பிரீவர்ஸ், மக்காச்சோளம் மைதா, சிரப், சர்க்கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயரிக்கவும் பயன்படுகிறது. இதில் கோ-1, கே-1, கங்கா -5, கே.எச் -1,2,3, கோஎச்.எம் -5, எம் -900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே -6240, பயனீர் -30 வி -62, பயனீர் -30 வி -92 மற்றும் பிக்பாஸ் ஆகியன முக்கிய வீரிய ஒட்டு ரகங்களாகும்.

ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பூசன நோயை தடுக்க 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோ டெர்மா விரிடி என்ற உயிரியல் பூசான கொல்லியை கலந்து 24 மணிநேரம் வைத்திருந்து பின்பு விதைக்க வேண்டும். இத்துடன் உயிர் உரவிதை நேர்த்தியும் செய்யவேண்டும். 1 ஏக்கருக்கு 500 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஆரிய வடி (அரிசி) கஞ்சியில் கலந்து அதனுடன் பூசன விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் அரை மணிநேரம் உலர்த்தி பின் 60 X 20 செ.மீ இடைவெளியில் 4 செ.மீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும்.

விதைத்த 3 நாட்களுக்குப்பின் மண்ணில் போதுமான ஈரம் இருக்கும் போது களைக்கொல்லியை கைத்தெளிப்பான மூலம் தெளிக்கவேண்டும்.

களைக்கொல்லி பயன்படுத்தாவிடில் கை களை எடுக்கவேண்டும். தேவைக்கேற்ப 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்யவேண்டும். பூக்கும் தருனத்தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடை பிடித்தால் 1 ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து ரூ.45,000 ரூபாய் வரை வருமானம் பெறலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

## வீரிய ஒட்டு மக்காச்சோளத்தில் அதிக மகசூல் பெறலாம்

சேதுபாவாசக்திரம், : சேதுபாவாசக்திரம் வட்டாரக்கில் வீரிய ஒட்டு மக்கா சோளம் சாகுபடியில் தொழில் நுட்பங்களை கையாண்டால் அதிக மகசூல் பெறலாம் என்று சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியிருப்பதாவது: மக்கா சோளம் கால்நடை தீவனமாகவும், சமையல் எண்ணை எடுப்பதற்காகவும் பயன்படுவதுடன் தொழிற்சாலைகளில் மக்காச்சோளம் ஸ்டார்ச், பிரீவர்ஸ், மக்காச்சோளம் மைதா, சிரப், சர்க்கரை, குளுக்கோஸ் போன்ற பல பொருட்கள் தயரிக்கவும் பயன்படுகிறது. இதில் கோ-1, கே-1, கங்கா -5, கே.எச் -1,2,3, கோஎச்.எம் -5, எம் -900, எம்.ஹைசெல், சின்ஜென்டா, என்.கே -6240, பயனீர் -30 வி -62, பயனீர் -30 வி -92 மற்றும் பிக்பாஸ் ஆகியன முக்கிய வீரிய ஒட்டு ரகங்களாகும்.

ஏக்கருக்கு 6 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதை மூலம் பூசன நோயை தடுக்க 1 கிலோ விதைக்கு 4 கிராம் டிரைகோ டெர்மா விரிடி என்ற உயிரியல் பூசான கொல்லியை கலந்து 24 மணிநேரம் வைத்திருந்து பின்பு விதைக்க வேண்டும். இத்துடன் உயிர் உரவிதை நேர்த்தியும் செய்யவேண்டும். 1 ஏக்கருக்கு 500 கிராம் அசோஸ்பைரில்லம் மற்றும் பாஸ்போ பாக்டீரியாவை ஆரிய வடி (அரிசி) கஞ்சியில் கலந்து அதனுடன் பூசன விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் அரை மணிநேரம் உலர்த்தி பின் 60 X 20 செ.மீ இடைவெளியில் 4 செ.மீ ஆழத்தில் விதையை ஊன்ற வேண்டும்.

விதைத்த 3 நாட்களுக்குப்பின் மண்ணில் போதுமான ஈரம் இருக்கும் போது களைக்கொல்லியை கைத்தெளிப்பான மூலம் தெளிக்கவேண்டும். களைக்கொல்லி பயன்படுத்தாவிடில் கை களை எடுக்கவேண்டும். தேவைக்கேற்ப 6 முதல் 8 முறை நீர்பாசனம் செய்யவேண்டும். பூக்கும் தருனத்தில் தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடை பிடித்தால் 1 ஏக்கரில் 2,500 முதல் 3,000 கிலோ வரை மகசூல் எடுத்து ரூ.45,000 ரூபாய் வரை வருமானம் பெறலாம். இவ்வாறு வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**உரம், பூச்சிக்கொல்லி மருந்து விலை உயர்வு: போதிய விலை கிடைக்காததால் கொய்மலர் விவசாயிகள் அவதி**



கொலக்கம்பை,

உரம், பூச்சிக்கொல்லி மருந்து விலை உயர்ந்து வரும் நிலையில் கொய்மலர்களுக்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு உள்ளனர். எனவே வங்கி கடனை ரத்து செய்ய வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

தேயிலை விலை வீழ்ச்சி

நீலகிரி மாவட்டத்தின் முக்கிய விவசாயமாக இருந்த தேயிலைக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டது. இதனால் தேயிலையை நம்பி இருந்த சிறு, குறு விவசாயிகள் மட்டுமல்லாமல் மாவட்டத்தில் உள்ள அனைத்து தரப்பினரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தவித்தனர். இதனை தொடர்ந்து பெரும்பாலான விவசாயிகள் மாற்று விவசாயம் செய்ய முடிவு செய்தனர். அதன்படி சிலர் மலைத்தோட்ட காய்கறி விவசாயமும், பலர் கொய்மலர் விவசாயமும் செய்தனர்.

கொலக்கம்பை மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளான தூதூர்மட்டம், டெராமியா, கரும்பாலம், உலிக்கல், கோட்டக்கல் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள விவசாயிகள் கார்னேசன், போர்டு ஆப் பாரடைஸ் உள்ளிட்ட கொய்மலர்களை சாகுபடி செய்ய வங்கிகளில் கடன் பெற்றனர்.

கொய்மலர் சாகுபடி

இந்த நிலையில் டெராமியா பகுதியில் தற்போது சாகுபடி செய்யப்பட்டு உள்ள போர்டு ஆப் பாரடைஸ் மலர்கள் பூத்து குலுங்கி வருகிறது. ஆனால் இதற்கு போதிய விலை கிடைக்காததால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர். இதுகுறித்து கொய்மலர் விவசாயி நாகராஜ் கூறியதாவது:– நீலகிரி மாவட்டத்தில் கடந்த 1999–ம் ஆண்டு பச்சை தேயிலைக்கு கடுமையான விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

இதனை தொடர்ந்து மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் கொய்மலர்களை அதிகளவில் சாகுபடி செய்தனர். ஆனால் தரமற்ற விதை, கொள்முதல் நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்காதவை உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் விவசாயிகள் பெரிதும் நஷ்டம் அடைந்தனர். இதன் காரணமாக வங்கிகளில் வாங்கிய கடன்களை திரும்ப செலுத்த முடியாத நிலை ஏற்பட்டு உள்ளது.

மகசூல் குறைவு

கொலக்கம்பை பகுதியில் உள்ள விவசாயிகள் போர்டு ஆப் பாரடைஸ் வகையை சேர்ந்த கொய்மலரை அதிகளவில் சாகுபடி செய்து உள்ளனர். மார்ச், ஏப்ரல் மாதங்களில் முதல் சீசனும், செப்டம்பர், அக்டோபர் மாதங்கள் 2–வது சீசன் காலமாகும். இந்த காலகட்டத்தில் ஒவ்வொரு செடிகளிலும் குறைந்தது 15 முதல் 20 பூக்கள் வரை பூக்கும். இதனை அறுவடை செய்து ஒவ்வொரு பூக்களையும் தனித்தனியாக திசு பேப்பரில் சுற்றி 150 பூக்கள்கள் கொண்ட ஒரு அட்டை பெட்டியையும் குன்னூர், ஊட்டி பகுதிகளில் உள்ள தனியார் மலர் கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்வோம்.

இதனை பெங்களூரு, மும்பை உள்ளிட்ட பகுதிகளுக்கு கொண்டு செல்லப்பட்டு விற்பனை செய்யப்படும். இந்த பூக்கள் குறைந்து 10 முதல் 15 நாட்கள் வரை வாடாமல் இருக்கும். நீலகிரி மாவட்டத்தில் கடந்த 3 மாதங்களாக மழை பெய்யாததால் கொய்மலர் மகசூல் குறைந்து உள்ளது. தற்போது ஒரு செடியில் 2 அல்லது 3 பூக்கள் மட்டுமே பூக்கிறது.

<u>வங்கி கடன் ரத்து செய்ய கோரிக்கை</u>

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மலர் ரூ.10 முதல் ரூ.18 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் தற்போது ரூ.5 முதல் ரூ.6 வரை மட்டுமே விலை கிடைக்கிறது. கொய்மலருக்கு போதிய விலை கிடைக்காததால் நாங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளோம். மேலும், உரம், பூச்சிக்கொல்லி மருந்து, அட்டைபெட்டி உள்ளிட்டவைகளின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு உள்ளோம்.

எனவே சம்பந்தப்பட்ட துறையினர் கொய்மலர் விவசாயிகளுக்கு மானியம் வழங்க வேண்டும். மேலும், விவசாயிகள் வாங்கிய வங்கி கடன்களை ரத்து செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.